# பத்மனாபபுரம் நகராட்சி

**செப்டம்பர் 2018–ம் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டப் பொருட்கள் விபரம்**

## பொருட்கள்

1) 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்து வரி நிர்ணயம் செய்வது குறித்து அரசாணை (MS) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள். 19.07.2018–ன்படி கீழ்கண்ட விபரப்படியாக சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

1. குடியிருப்பு கட்டிடங்கள் – 50% மிகாமல்
2. வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் – 100% மிகாமல்
3. குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் – 100% மிகாமல்

அரசாணை (MS) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை நாள். 26.07.2018–ன்படி

1. குடியிருப்பு கட்டிடங்கள் – 50% மிகாமலும்
2. குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் – 100% மிகாமலும்

பொது சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர்1, நாள். 20.08.2018 மற்றும் வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டுமெனவும் மேலும் சொத்துவரி விதிப்பு நியாயமானதாகவும், முறையானதாகவும், ஏற்றத்தாழ்வுகள் அற்றதும், வெளிப்படை தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டுமெனவும் இப்புதிய முறை சொத்துக்கள் அமைந்துள்ள பகுதிகளின் வாடகை அடிப்படையில் அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து மண்டல அடிப்படை மதிப்பை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4314/93/ஆர்1, நாள்.11.01.93–ன் படி மாற்றியமைத்து சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.1375/2018/அ2, நாள்.24.08.2018–ன் படி பொது சொத்துவரி நிர்ணயம் செய்ய நியமிக்கப்பட்ட குழு சமர்பித்த அறிக்கையின்படி நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டும் கீழ்கண்ட விபரப்படியாக மண்டல அடிப்படை மதிப்பில் உயர்வு செய்தும், மண்டலத்தினை மாற்றியமைத்தும் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளலாம்.

**அடிப்படை மண்டல மதிப்பு**

| மண்டலங்கள் | ஏற்கெனவே உள்ள அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) | தற்பொழுது நிர்ணயம் செய்யும் அடிப்படை மதிப்பு (சதுர அடிக்கு) |
|---|---|---|
| A | ரூ.1.00 | ரூ.2.20 |
| B | ரூ.0.65 | ரூ.1.30 |

**மண்டலங்களின் விபரம்**

| வார்டு எண். | தெருவின் பெயர் | பிளாக் எண் | 01.04.2008 பொது சொத்துவரி சீராய்வின் போது நிர்ணயிக்கப் பட்ட மண்டலம் | 01.04.2018 பொது சொத்துவரி சீராய்வின்படி தற்போது மாற்றியமைக்கப்படும் மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | மணலி | 28<br>30 | B<br>B | A<br>B |
| 2 | பத்மனாபபுரம் | 36–37<br>(1 முதல் 59) | B | B |
| 3 | இராமசுவாமி கோவில் | 37(60 to end)<br>38 | B<br>B | B<br>B |
| 4 | நீலகண்டசுவாமி கோவில் | 32, 33 | B | B |
| 5 | பேலஸ் | 34,35 | B | B |
| 6 | அம்மன்கோவில் | 21<br>27 | A<br>B | A<br>A |
| 7 | அஞ்சுவண்ணம் | 25<br>26( 1 முதல் 69) | B<br>B | B<br>A |
| 8 | சாரோடு | 26( 70 to end)<br>31 | B<br>B | A<br>B |
| 9 | மருத்துவமனை | 23<br>29 | A<br>B | A<br>A |
| 10 | பள்ளி | 22,24 | A | A |
| 11 | மேட்டுக்கடை | 14,20 | A | A |
| 12 | மார்க்கெட் | 16,19 | A | A |
| 13 | நகராட்சி அலுவலகம் | 15,18 | A | A |
| 14 | சிறுகடை | 8(52 முதல் 100) | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 9 | B | B |
| 15 | பேருந்து நிலையம் | 13,17 | A | A |
| 16 | கச்சேரி | 11, 12 | A | A |
| 17 | கொல்லன்விளை | 7<br>10 | B<br>A | A<br>A |
| 18 | புலியூர்குறிச்சி | 4(1 முதல் 49)<br>6,8(1 முதல் 51) | B<br>B | A<br>A |
| 19 | உதயகிரி | 5 | B | A |
| 20 | ஆசான்கிணறு | 2<br>3<br>4(50 to end) | B<br>B<br>B | B<br>B<br>A |
| 21 | குமாரகோவில் | 1 , 2 | B | B |

சிறப்பு இன கட்டிடங்களுக்கான நட்சத்திர ஹோட்டல், வணிக வளாகங்கள், குளிர்சாதன வசதியுள்ள திருமண மண்டபங்கள், சிறப்பு தனி மருத்துவமனைகள், மல்டிப்ளக்ஸ் ஆகியவற்றிற்கு அடிப்படை மண்டல மதிப்பு அனைத்து வார்டுகளுக்கும் A மண்டலத்தில் நிர்ணயம் செய்வதற்கும், அரசின் ஆணை மற்றும் வழிகாட்டுதலில் வழங்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கான தள்ளுபடி மற்றும் சலுகைகள் அடிப்படையில் 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண். 1375/2018/அ2)

மன்றத் தீர்மானம் எண்.1344
அனுமதிக்கப்பட்டது.

2)இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN74W-0436-க்கு கீழ்காணும் பழுது பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.40,000/– ஆகும். எனவே கீழ்கண்ட பழுது பணிகள் மேற்கொள்ளவும் செலவுத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

<u>பழுது பணிகள் விபரம்</u>

1)கியர் சரி செய்வதற்கு
2)டீசல் பம்பு சரி செய்ய
3)நான்கு டோர் பழுது பார்க்க
4)நான்கு வீல் செக்கப் (ம) பிறேக் செக்கப் பார்த்தல்.
5)ஆயில் மாற்றி டீசல் பில்டர், ஆயில் பில்டர் (ம) ஏர் பில்டர் மாற்றுதல்.
6) வைப்பர் மோட்டார் சரி செய்தல் (ம) எலக்ட்ரானிக் செக்கப்
7)வாகனம் முழுவதும் full சர்வீஸ் மற்றும் கிரீஸ் வைத்தல்.

மன்றத் தீர்மானம் எண்.1345
அனுமதி வழங்கப்பட்டது.

3) இந்நகராட்சியில் சொத்துவரியினை 01–04–2018 முதல் மாற்றி அமைக்கப்படவுள்ளதால் சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவம் அச்சிட்டு வாங்குவதற்கு 10–09–2018–ல் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | படிவ விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | Rose offset printers Karungal | முன் பின் இரு பக்கங்கள் ஒரு படிவம் | 1.20 |
| 2. | Innovation Printers Nagercoil | ” | 1.25 |
| 3. | Adhi Printer Nagercoil | ” | 1.30 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண். 2 மற்றும் 3–ஐ விட வ.எண். 1–ல் உள்ள Rose Offset Printers, Karungal நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவாக வழங்கப்பட்ட Rose Offset Printers, Karungal நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும், மேலும் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1375/2018/அ2)

மன்றத் தீர்மானம் எண்.1346
அனுமதிக்கப்பட்டது.

4)இந்நகராட்சிப் பகுதிகளில் தெருக்களில் சுற்றித் திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிட்சை செய்ய (ABC) 21-08-2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் 27–08–2018–ம் நாளிட்ட ராஜேஸ்வரி கௌசலா டிரஸ்ட், திருநெல்வேலி அவர்களின் கடித்தின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு ஆணை எண். 106, நாள் 10–06–2008–ன் நெறிமுறைப்படியும், நகராட்சி நிர்வாகம் ஒதுக்கித் தரும் உள் கட்டமைப்பில் தெரு நாய் ஒன்றிற்கு ரூ.700/– வீதத்தில் கருத்தடை அறுவை சிகிட்சை செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. எனவே ராஜேஸ்வரி கௌசாலா டிரஸ்ட், திருநெல்வேலி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத் தீர்மானம் எண்.1347
அனுமதிக்கப்பட்டது.

5)இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தமிழ்நாடு பொதுப்பணி துறை தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தின்படி 01–11–2017 முதல் 31–03–2018 வரை பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.3.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நகர் மன்றத் தீர்மானம் எண்.1123, நாள் 31–10–2017–ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒப்பந்த அடிப்படையில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 28–02–2018 வரை உள்ள காலத்திற்கு மேற்கண்டசெலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்தில் ரூ.1,15,444/– மட்டும் செலவினம் செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி பொறியாளர் அவர்களின் 23–03–2018 ஆம் தேதி அறிக்கையின்படி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே ஒப்பந்ததாரர் விலை விகிதத்தில் (ஒப்பந்ததாரர் திரு. ஜி. சுந்தர்ராஜ்) ஒப்பந்த பணியாளர்கள் பணியினை மேற்கொள்ள தெரிவித்துள்ளார். மேற்படி இதுநாள் வரையிலும் 30–06–2018 முடிய ரூ.1,78,644/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்படி 01–04–2018 முதல் 30–06–2018 முடிய உள்ள காலத்திற்கும் இனி வரும் காலத்திற்கும் ஊதியம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு–</u> 31–10–2017 நாளிட்ட மன்ற தீர்மான எண் 1123–ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.3,00,000/– மூன்று இலட்சத்தில் நிலுவை உள்ள தொகைக்கு மட்டும் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1763/2017/இ1)
மன்றத் தீர்மானம் எண்.1348
அனுமதி வழங்கப்பட்டது.

6)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வணிக வளாக பகுதியில் தக்கலை பேட்டை சந்தை அருகில் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ. 7.30 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எரிவாயு அடுப்பு பழுதான காரணத்தினால் மேற்படி எரிவாயு அடுப்பினை (Gas Stove) பழுது பணி பார்க்கவும் உள்ளூர் (ம) வெளியூர் நிறுவனத்தாரிடம் இருந்து புதிய Gas Stove S.S. Steel cover (24x24x15) மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | M/s. JSA Hotel Steel Equiepments Nagercoil. | 24100/– |
| 2. | M/s. Sun Agencies Kulasekaram | 25100/– |
| 3. | K. Xavier Josephraj Marthandam | 25000/– |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/s.JSA Hotel, Steel Equipments, Nagercoil நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளது. மேற்கண்ட அம்மா உணவகம் பராமரிப்பு பணி மதிப்பீட்டில் (1.30 இலட்சம்) மேற்கண்ட எரிவாயு அடுப்பு பழுது பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மன்றத் தீர்மானம் எண்.1349
அனுமதி வழங்கப்பட்டது.

7)இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தி வரும் (Xerox Machine) ஒளி நகல் எடுக்கும் இயந்திரம் பழுதடைந்த காரணத்தினால் உபயோக படுத்த முடியாத நிலையிலும் பழைய தரத்தை சார்ந்தவையாகவும், பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பழைய Xerox Machine-ஐ தள்ளுபடி விலையில் எடுத்துக் கொண்டு புதிய Xerox Machine–ஐ வாங்குவதற்கு அரசாங்க இணைய தள சந்தை மதிப்பீட்டின்படி விலைவிகிதத்தின்படி பழைய ஜெராக்ஸ் மிஷினை ரூ.6000/–க்கு எடுத்துக் கொண்டு நிகர விலைக்கு ரூ.62,800/–க்கு தருவதாக விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

மேற்படி Xerox Machine விநியோகம் செய்ய 20–07–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனதாரர் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1. | Q- Tech services<br>Tirunelveli | 46,640/– |

மேற்கண்ட நிறுவனம் அரசாங்க இணைய தள சந்தை மதிப்பீட்டின்படி குறைவாக கொடுத்துள்ளதாலும் பழைய Xerox Machine-ஐ ரூ. 10,000/– க்கு எடுத்துக் கொண்டு நிகர விலை ரூ.46,640/–க்கு (11–05–218 அன்று பெறப்பட்ட Hindusthan GEM Order கடிதத்தின்படி அரசாங்க மதிப்பீட்டினை விட குறைவாக உள்ளதால் Q- Tech services, Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத் தீர்மானம் எண்.1350

அனுமதி வழங்கப்பட்டது.

8)பத்மனாபபுரம் நகராட்சி ஆணையாளர் அறையிலுள்ள கணணியில் Local Area Network Cable பதிக்கும் பணிக்கு நேரடியாக கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன அதன் விபரம் கீழ்வருமாறு.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை<br>ரூ.** |
|---|---|---|
| 1. | Computronic Engineer's<br>Nagercoil | 4310.00 |
| 2. | Bharathi Computers<br>Nagercoil | 5419.00 |
| 3. | Nutech Systems Service<br>Nagercoil | 5300.00 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s/ Computronic Engineers, Nagercoil நிறுவனத்திற்கு விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5000/–ஐ நகராட்சி பொது நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1611/2018/இ1)

மன்றத் தீர்மானம் எண்.1351

அனுமதி வழங்கப்பட்டது.

தனி அலுவலர்(ம) ஆணையாளர்,

பத்மனாபபுரம் நகராட்சி.